சமூக நல ஆணையரக கூடுதல் இயக்குநர், சென்னை–15 அவர்களின் செயல்முறை நடவடிக்கைகள்

முன்னிலை: திருமதி.க.ஜெயலட்சுமி, **M.A., M.Phil.,**

செ.மு.ந.க.எண் 2608/நிரு.4(1)/2020 நாள் :-31.01.2020

பொருள்:– பணியமைப்பு – சமூக நல ஆணையரகம், சைதாப்பேட்டை, சென்னை 15 – திரு.த.விஜயராஜா, இளநிலை உதவியாளர், மாவட்ட திட்ட அலுவலகம், விருதுநகர் மாவட்டம் என்பவருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை பூர்த்தி செய்து ஆணை வழங்குவது – சார்பு.

பார்வை:– 1.செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் அவர்களின் கடித எண்.1158/PSD-H1/2019 நாள்:-18.02.2019.
2. சமூக நல ஆணையர், சென்னை–15 அவர்களின் செ.மு.ந.க.என் 5711/நிரு.4(3)/2019 நாள்:-28.02.2019.
3.மாவட்ட திட்ட அலுவலர், விருதுநகர் மாவட்டம் அவர்களின் ந.க.எண்.2965/அ1/2019 நாள்:-20.01.2020.

.........

ஆணை :

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்டு விருதுநகர் மாவட்டம், மாவட்ட திட்ட அலுவலகத்தில் இளநிலை உதவியாளராகப் பணிபுரியும் திரு.த.விஜயராஜா என்பவருக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016ல் பிரிவு 28 (1)ன்படி இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்த நாளான 12.03.2019 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் / சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் 2015–16, 2016–17 மற்றும் 2017–18க்கான தொகுதி–IV தேர்வு மூலம் நியமனம் தொடர்பாக நிலுவையில் உள்ள வழக்கின் தீர்ப்பிற்குட்பட்டு (நீதிப்பேராணைக்குட்பட்டு) பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

திரு.த.விஜயராஜா, இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யப்பட்ட நாள் முதல் தொடர்ந்து 3 ஆண்டு கால பணியில் இரண்டாண்டுகள் தகுதிகாண்பருவத்தினராக இருப்பார் எனவும் ஆணையிடப்படுகிறது.
இணைப்பு:- பணிப்பதிவேடு

ஒம்/–க.ஜெயலட்சுமி
கூடுதல் இயக்குநர்

பெறுநர்
திரு.த.விஜயராஜா,
இளநிலை உதவியாளர்,
மாவட்ட திட்ட அலுவலகம்,
விருதுநகர் மாவட்டம் (உரிய அலுவலர் மூலமாக)

நகல்
1. மாவட்ட திட்ட அலுவலர், விருதுநகர் மாவட்டம். (மேற்படி பணியாளரின் பணிப்பதிவேடு இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. பணிப்பதிவேடு பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புதலை உடன் அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்).
2. இருப்பு கோப்பு / உதிரி.

//ஆணைப்படி//

31/01/2020
கண்காணிப்பாளர்.
31-01-2020

மாவட்ட திட்ட அலுவலகம்
ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள்
விருதுநகர் மாவட்டம்.

மே. க. எண். 2965/அ1/2019

நாள்: -2-2020

இணை சார்பு செய்யப்படுகிறது

மாவட்ட திட்ட அலுவலர்
ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள்
விருதுநகர் மாவட்டம்.

20/2/2020

பெறுநர்

திரு. த. அதயராசு
இளநிலை உதவியாளர்
மாவட்ட திட்ட அலுவலகம்
விருதுநகர் மாவட்டம்